பக்கங்கள் : 12
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 236 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 27 வெள்ளிக்கிழமை (12.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## அனுமதியின்றி சீன கப்பல் துறைமுகம் நுழைய முடியாது

### அம்பாந்தோட்டை துறைமுக அதிபர்


(கொழும்பு)

சீனாவின் போலிஸ்டிக் ஏவுகணை மற்றும் செயற்கைக்கோள் கண்காணிப்பு கப்பலான யுவான் வாங் 5, இன்று(நேற்று) துறைமுகத்தை வந்தடையாது என்று அம்பாந்தோட்டை துறைமுக அதிபர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய தனது அனுமதியின்றி அம்பாந்தோட்டை துறை 11

### ஆயிரக்கணக்கான அடியவர்கள் சூழ

## மஞ்சத்தில் வந்த நல்லைக் கந்தன்



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தில் பத்தாம் நாளான நேற்று மாலை மஞ்சத் திருவிழா பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

கஜவல்லி மகாவல்லி 11

# மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

### ஜனாதிபதியிடம் ஐரோப்பிய ஒன்றிய தூதுவர்கள் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டியதோடு கருத்துச் சுதந்திரமும் பொது மக்களின் உரிமை உள்ளிட்ட விடயங்கள் முன்னேற்றகரமாக இருக்க வேண்டும் என ஜனாதிபதி ரணிலிடம் ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்கள் தெரிவித்துள்ளனர்.

(11ஆம் பக்கம் பார்க்க)



## ஜனாதிபதியின் ஆசனத்தில் அமர்ந்த

### இரு பெண்கள் கைது

(கொழும்பு)

கொழும்பு - கோட்டை ஜனாதிபதி மாளிகைக்குள் பிரவேசித்து ஜனாதிபதியின் ஆசனத்தில் அமர்ந்து புகைப் படங்களை சமூக வலைத்தளங்களில் 11

## பெற்றோல் கப்பல் வருகின்றது

(கொழும்பு)

35 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோலுடனான கப்பலொன்று கொழும்புக்கு வரவுள்ளது.

இலங்கை மத்திய 11

### தாய்லாந்தில் தரையிறங்கினார்

## போர் வெற்றி நாயகன்



(பாங்கொக்)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிங்கப்பூரிலிருந்து வெளியேறி தாய்லாந்தை சென்றடைந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

சிங்கப்பூரில் சுமார் ஒரு 11

## அரசின் தவறான அணுகுமுறையால் சீனாவின் ஆதரவை இழக்கலாம்

### கப்பல் விவகாரம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

அரசாங்கம் இந்தச் சந்தர்ப்பத்தில் அறிவைப் பயன்படுத்தி சரியான அணுகுமுறையில் வேலை செய்யவில்லை என்றால், இலங்கை சீனாவின் ஆதரவை இழந்து விடும் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். 11



### சீன கப்பல் வருகையையடுத்து

## தயார் நிலையில் இந்திய ரேடர்கள்

(சென்னை)

சீனாவின் ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வருகை தரவுள்ள நிலையில் இந்தியா தனது ரேடர்களை தொலைதூரம் பார்க்கும் வகையில் தயார் நிலையில் வைத்துள்ளது.

இந்தியாவின் எதிர்ப்பை மீறி சீனா, தங்கள் நாட்டு உளவுக் கப்பலை இலங்கையை நோக்கி அனுப்பியுள்ளதால்சென்னை மெரினா கலங்கரை 11

### நாட்டில் மேலும்

## 188 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

நாட்டில் மேலும் 188 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

அதன்படி, நாட்டில் கொரோனா 11

### இலங்கையை மீறி

## அடாத்தாக நுழையும் சீன உளவுக் கப்பல்

### இந்திய ஊடகங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் எதிர்ப்பை மீறி சீன யுவான் வாங்-5 கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைய உள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கப்பலின் இலங்கைக்கான பயணத்தை ஒத்தி வைக்குமாறு வெளிவிவகார அமைச்சு கோரிக்கை விடுத்த போதிலும், 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில்

# இலங்கை சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையை தயார் செய்யும் அரசு

## நீதி அமைச்சர் விஜயதாஸ தலைமையில் கலந்துரையாடல்

(கொழும்பு)



**ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் கூட்டத்தொடரை எதிர்கொள்வதற்காக இலங்கையால் சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கையைத் தயாரிக்கும் பணிகள் தொடர்பில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.**

இதன்போது இலங்கையின் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் மறுசீரமைப்பு தொடர்பில் செயற்படுகின்ற உள்நாட்டு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பில் ஆராயப்பட்டது.

நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரியின் பங்குபற்றலுடன் நீதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மனித உரிமைகளைப் பாதுகாத்தல், நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் மறுசீரமைப்பு என்பவற்றுக்குரிய நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பில் இதன்போது கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

அத்தோடு எதிர்காலத்தில் இந்த நிறுவனங்கள் செயற்பட வேண்டிய முறைமை தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரை எதிர்கொள்வதற்காக, அதனுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து பொறிமுறையொன்றைத் தயாரிப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜய் ராஜரத்னம், வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.ஆர்.கே.லேனகல, நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர்களான பியூமந்திர பீரிஸ் (சட்டம்), ஆர்.பீ.எஸ்.சமன் குமாரி, ரோஹண ஹப்புகஸ்வத்த, அமைதி , நல்லிணக்கம் மற்றும் மறுசீரமைப்பு தொடர்பான அலுவலகத்தின் தலைவர் ஜே.ஜே.ரத்னசிறி, அதன் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (ம-7)

# சர்வகட்சி அரசு அமைப்பது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்திக்குள் முரண்பாடு

## ரணில் அரசில் இணைய தயாராகும் மூத்த உறுப்பினர்கள்

(கொழும்பு)

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது சம்பந்தமாக ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்குள் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் உக்கிரமடைந்துள்ளதாக தெரிய வருகிறது.

நாடு பொருளாதார ரீதியாக பாரதூரமான நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் சந்தர்ப்பத்தில் கூட்டாக இணைந்து நாட்டை மீட்டெடுக்க முயற்சிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

நாட்டின் தற்போதைய தருணத்தில் அரசாங்கத்தில் இணைந்து நாட்டை மீட்டெடுக்க முயற்சிக்க வேண்டும் எனவும் அப்படி செய்யவில்லை என்றால் மக்கள் மத்தியில் தமது அரசியல் நிராகரிக்கப்படும் என அந்த கட்சியில் முக்கிய பதவிகளை வகிக்கும் மூத்த உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஏதேனும் ஒரு வகையில் சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவதில்லை என கட்சி தீர்மானித்தால், தாம் தனிப்பட்ட ரீதியில் அரசாங்கத்தில் இணைய போவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் மூத்த உறுப்பினர்கள் உட்பட சிலர், கட்சிக்கு அறிவித்துள்ளதாக தெரியவருகிறது.

ஐக்கிய மக்கள் சக்தி சர்வகட்சி அரசாங்கத்தில் இணையாது என தீர்மானிக்கப்பட்டால், அதில் அங்கம் வகிக்கும் மூத்த உறுப்பினர்கள் உட்பட முக்கியஸ்தர்கள் கட்சியில் இருந்து வெளியேறி அரசாங்கத்தில் இணைவார்கள் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

# பேராயருக்கு கொரோனா

(கொழும்பு)

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார். அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும், அவருக்கு பெரிய பாதிப்புகள் எவையும் இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றியிருப்பதால், மல்கம் ரஞ்சித் ஆண்டகை, ஏற்கனவே திட்டமிட்டிருந்த சகல சந்திப்புகளையும் ஒத்திவைத்துள்ளார். (ம-7)

# அநுராதபுரத்தில் கசிப்பு அருந்திய நால்வர் பலி

அநுராதபுரம் இப்பலோகம பிரதேசத்தில் சில கிராமங்களில் கசிப்பு அருந்தியவர்களில் நான்கு பேர் திடீரென இரண்டு நாட்களில் உயிரிழந்துள்ளனர்.

சம்பவத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த இரண்டு சகோதரர்கள் உயிரிழந்துள்ளனர்.

இப்பலோகம கல்வங்குவ பிரதேசத்தை சேர்ந்த 38 வயதான நபர் கெக்கிராவை வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

அதே இடத்தில் வசிக்கும் 39 வயதான நபர் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

பஹால செம்புவ பிரதேசத்தை சேர்ந்த 66 வயதான வஸ்துவாககே ஆரியபால என்பவர் வீட்டில் உயிரிழந்துள்ளார். அளுத்தம் போவிட்ட பகுதியை சேர்ந்த 65 வயதானவர் வீட்டில் உயிரிழந்துள்ளார்.

இவர்கள் அருந்திய கசிப்பு விஷமானதால், உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (ம-7)


## கண்ணீர் அஞ்சலி



மலர்வு 15.01.1953 உதிர்வு 10.08.2022

எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி **சுபாசினி உதேஷ்** அவர்களின்
பாசமிகு மாமியார்
அமரர் **விக்கினேஸ்வரமூர்த்தி**
**யோகநாயகி**
அவர்கள் 10.08.2022 அன்று
காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத் துயரில் பங்குகொள்ளும்
ஆசிரியர் கழகம்,
யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

(12414)


# காலியில் மாணவர்கள் துஷ்பிரயோகம்

## 44 வயதுடையவர் கைது

(கொழும்பு)

காலி பிரதேசத்தில் பல பாடசாலை மாணவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக கூறப்படும் ஒருவரை குற்றப் புலனாய்வு திணைக்களம் கைது செய்துள்ளது.

காலி பிரதேசத்தில் உள்ள பல பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளின் பெற்றோர்களின் முறைப்பாட்டின்படி, அவர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

உனவடுன பிரதேசத்தில் வசிக்கும் 44 வயதைக் கொண்டவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர், வாட்ஸ்அப் மூலம் சிறுவர்களுடன் பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அவர், பிரபல ஆலயம் ஒன்றை நடத்தி வரும் மதகுரு என்ற போர்வையில் சிறுவர்களை ஈர்த்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலி நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட அவர் ஆகஸ்ட் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊட்டச்சத்து குறைவால் குழந்தைகளுக்கு அறிவு வளர்ச்சி இல்லாமல் போகும் அபாயம்

## குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**சிறுவர் மருத்துவமனைக்கு வரும் குழந்தைகளில் 20 வீதமானவர்கள் இருந்ததை விட அதிக எடை குறைந்துள்ளமை கடந்த சில மாதங்களாக அவதானிக்கப்பட்டுள்ளது என குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் சங்கத்தின் தலைவர் தேவிகா கொடித்துவக்கு தெரிவித்தார்.**

இதே நிலை நீடித்தால், அவர்களின் வயதுக்கு ஏற்ற எடை குறைவாக உள்ள குழந்தைகளாக இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வயதுக்கு ஏற்ப குழந்தையின் எடை அதிகரிக்காவிட்டால், அறிவு வளர்ச்சி குன்றிய குழந்தையாக மாறுவது மட்டுமல்லாமல், உள் உறுப்புகள் சரியாக வளர்ச்சியடையாத நோயுற்ற குழந்தையாகவும் மாறும் என்று அவர் வலியுறுத்தினார்.



இந்நிலையை உடனடியாகத் தடுக்க, குழந்தைகளுக்கு சரியான ஊட்டச்சத்தை வழங்க வேண்டும். இல்லையெனில் வருங்கால சந்ததியினர் பேரழிவைச் சந்திக்க நேரிடும் என அவர் எச்சரித்துள்ளார். (நி)

# ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு ஆதரவு வழங்கும்

## தூதுவர்கள் தெரிவிப்பு



(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று முன்தினம் சந்தித்தனர்.

சவால்மிக்க காலங்களில் இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவு வழங்கும் என குறித்த தூதுவர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் மனித உரிமைகள், கருத்துச் சுதந்திரம், பொதுமக்களின் உரிமைகள் உள்ளிட்ட விடயங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என அவர்கள் இதன்போது வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன் சர்வதேச நாணய நிதியம், ஜீ.எஸ்.பி +, மனித உரிமைகள் பேரவை என்பனவற்றின் செயற்பாடுகள் தொடர்பிலும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. (நி)

# ஜனாதிபதியாக ரணில் சத்தியப்பிரமாணம் செய்த நேரம் மிகவும் மோசமானது

## பிரபல ஜோதிடர் தகவல்

(கொழும்பு)

ஜூலை 12 ஆம் திகதிக்கு பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது ஜனாதிபதி பதவியை விட்டுவிலக நேரிடும். எதிர்பாராத ஒருவர் ஜனாதிபதியாகுவார். அவரால் இரண்டு மூன்று மாதங்களுக்கே பதவியில் இருக்க முடியும் என ஜூலை 7 ஆம் திகதி அரசியல் நிலவரங்களை கணித்து கூறிய பிரபல ஜோதிடர் கே.சரத் சந்திர தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் சில தகவல்களை வெளியிட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட நேரம் மிகவும் மோசமானது.

ஒக்டோபர் 13 ஆம் திகதிக்கு பின்னர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து பதவியை விட்டு செல்ல வேண்டி வரும் அத்துடன் ஜனவரி மாதத்திற்கு பின்னர் பொதுத் தேர்தல் நடத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார். இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே இத்தகவல்களை அவர் வழங்கியுள்ளார். (நி)

# வடக்கிலும் தெற்கிலும் முன்னெடுக்கப்படும் இந்திய வீடமைப்பு திட்டங்கள் துரிதப்படுத்தப்படும்-பிரசன்ன ரணதுங்க

(கொழும்பு)

வடக்கிலும் தெற்கிலும் இந்திய உதவியுடன் முன்னெடுக்கப்படும் வீடமைப்புத் திட்டங்கள் துரிதப்படுத்தப்படவுள்ளதாக வீடமைப்பு மற்றும் நிர்மானத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

தெற்கில் நிர்மாணிக்கப்படவுள்ள மொத்த வீடுகளின் எண்ணிக்கை 1200 ஆகும்.

இந்தத் திட்டங்களுக்காக இந்தியாவிலிருந்து 600 மில்லியன் ரூபாய் பெறப்பட உள்ளது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் மொத்த திட்டங்களின் எண்ணிக்கை 24 எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# பொன்சேகாவிடம் இருந்து பறிபோகும் பீல்ட் மார்ஷல் பதவி?

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா வகிக்கும் பீல்ட் மார்ஷல் பதவி சம்பந்தமாக தீர்மானம் ஒன்றை எடுக்குமாறு அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். சரத்பொன்சேகா அண்மையில் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்து அவர்கள் இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இறுதியான போராட்டத்திற்கு கொழும்புக்கு வருமாறும் உயிர்களை தியாகம் செய்தேனும் போராட்டத்தை வெல்ல வேண்டும் எனவும் பொன்சேகா கூறியிருந்தார். எனினும் அவரது கோரிக்கைக்கு அமைய போராட்டத்திற்காக மக்கள் கொழும்புக்கு வரவில்லை .

ஆனால் மக்களை தூண்டிவிடும் வகையில் பொன்சேகா கருத்து வெளியிட்டுள்ளதாக அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இறுதிக்கட்டப் போரில் இராணுவ தளபதியாக கடமையாற்றிய சரத்பொன்சேகாவுக்கு கடந்த 2015 ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவிக்கு வந்த பின்னர் இராணுவத்தின் மிக உயர்ந்த பதவியான பீல்ட் மார்ஷல் பதவியை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (நி)

# நவம்பரில் இலங்கை வருகிறார் கோட்டா

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 90 நாள் தாய்லாந்து விசா முடிந்து நவம்பர் மாதம் இலங்கை திரும்புவார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

மத்திய கிழக்கில் தஞ்சம் கோருவதற்கு பல முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அதற்கு சாதகமான பதில் கிடைக்காத காரணத்தினால், கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் நாடு திரும்பவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# மாகாண சபையின் நிர்வாக செலவின முகாமைத்துவ பொறுப்புக்கள் ஆளுநர்களுக்கு

## ஜனாதிபதி பணிப்புரை

(கொழும்பு)

மாகாணசபைகள் இயங்காத பின்னணியில் மாகாண சபைகளின் செலவுகள், மாகாண நிர்வாகம், அபிவிருத்தி ஆகிய செயன்முறைகளை உரிய முறையில் மேற்கொள்ள வேண்டிய பொறுப்புக்கள் ஆளுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இது குறித்து அனைத்து மாகாண ஆளுநர்களுக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

இன்றைய சவாலான காலகட்டத்தில் பொதுச் செலவினங்களை முகாமைத்துவம் செய்து பொது மக்களுக்கான சேவைகளை சிறப்பான முறையில் முன்னெடுப்பது மிகவும் முக்கியமானது எனவும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# கோழி இறைச்சி, முட்டை விலை அதிகரிப்பு

(கொழும்பு)

சந்தையில் முட்டை ஒன்றின் விலை 60 ரூபாவாக அதிகரித்துள்ளது.

ஒரு கிலோ கோழி இறைச்சி 1300 ரூபாய் முதல் 1350 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

கோழி தீவனத்தின் விலை உயர்வால் முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலை பெருமளவில் உயர்ந்துள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-இந்திய மாணவர்களுக்கு இடையிலான காட்டா போட்டிகள்

## இலங்கை மாணவர்கள் வெற்றி




பிரித்தானியாவை தலைமையகமாக கொண்டு இயங்கும் Goshin Isshinryu Karate Association (GIKA) ஆனது பிரித்தானியா, இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் கிளைகளுடன் செயற்பட்டு வருகின்றது.

GIKA இன் இலங்கை - இந்திய மாணவர்களுக்கிடையிலான கழகத்துக்கு உள்ளேயான காட்டா போட்டிகள் கடந்த 10 ஆம் திகதி நிகழ் நிலையில் இடம் பெற்றன.

இப் போட்டிகளில் GIKA இன் தலைவர் M.ராமதாஸ் சென்சாயின் தலைமையிலான அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த நடுவர் குழுவினர் மதிப்பீடு செய்து தரங்களை வழுங்கினர்.

போட்டியின் முடிவில் GIKA வின் இலங்கைக்கான தலைவர் பாபு சென்சாயிடம் பயிற்சி பெற்ற இலங்கை மாணவர்கள் அதிக பதக்கங்களை வென்று வெற்றி வாகை சூடினர்.

வெற்றி பெற்ற இலங்கை மாணவர்களுக்கான பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

வெற்றிபெற்ற மாணவர்களுக்கும், பிரித்தானிய கழக மாணவர்களுக்கும் இடையிலான போட்டிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன. (4)

# இலங்கை கிரிக்கெட் பிரிவு III-2022

## 30 ஆவது தகுதிகாண் போட்டியில் T.C.C அணி வெற்றி

இலங்கை கிரிக்கெட்டின் நெறிப்படுத்தலில் யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 50 ஓவர் கொண்ட தொடரின் 30 ஆவது தகுதி காண் போட்டியில் T.C.C. அணி AB அணியை 52 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய T.C.C. அணி 46.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 219 ஓட்டங்களை பெற்றுள்ளது.

சிவராஜ்-42, சுஜன்-37, லவகாந்-27, சுரேஸ்-26, தர்சிகன்-21 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.

பந்து வீச்சில் AB சார்பாக பிருந்தன் 9 ஓவர்களில் 43 ஓட்டங்களைக் கொடுத்து 03 விக்கெட்டுக்களையும் சர்மா 10 ஓவர்களில் 60 ஓட்டங்களை கொடுத்து 03 விக்கெட்டுக்களையும் யதுகுல்ன் 5 ஓவர்களில் 23 ஓட்டங்களை கொடுத்து 02 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய AB அணி 40.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 167 ஓட்டங்களை பெற்றுள்ளது. சிலோஜன் 45, உத்தமகுமரன்-32, யதுகுலன் -21 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.

பந்து வீச்சில் T.C.C. அணியைச் சார்ந்த கவிசன் 06 ஓவர்களில் 25 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் அன்ஜனன் 7 ஓவர்களில் 20 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் அனுரதன் 8.5 ஓவர்களில் 32 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டிய்ன மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் தரவரிசை (RATING) பட்டியலுக்கு T.C.C. அணி 8.71 புள்ளிகளையும் AB அணி 2.67 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (4)

# ஆசிய கிண்ணம்; இந்திய அணி அறிவிப்பு

ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான எதிர்பார்ப்பு மிக்க, 15பேர் கொண்ட இந்தியக் கிரிக்கெட் அணி விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரோஹித் சர்மா தலைமையிலான அணியில், கே.எல். ராகுல், விராட் கோலி, சூர்ய குமார் யாதவ், தீபக் ஹூடா, ரிஷப் பந்த், தினேஷ் கார்த்திக், ஹர்திக் பாண்ட்யா, ரவீந்திர ஜடேஜா, ஆர்.அஸ்வின், யுஸ்வேந்திர சஹல், ரவி பிஷ்னோய், புவனேஷ்வர் குமார், ஹர்ஷ்தீப் சிங், அவிஷ்கான் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

அதேவேளை, துரதிஷ்ட வசமாக அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஜஸ்பிரிட் பும்ரா இந்த தொடரிலிருந்து விலகியுள்ளார். (4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2684

### நிசா

உங்கள் கண்ணீர் துடைக்க ஆயிரம் பேர் வருவாங்க....



மூக்கு துடைக்க ஒருத்தனும் வர மாட்டான் இது குளிர்காலம் சளி பிடிக்காம பார்த்துக்கோங்க...

### ஜெனா



மனைவி : என்னங்க நான் மாசமா இருக்கேன்...
கணவன் : உங்க அப்பா அம்மாகிட்ட சொன்னியா?
மனைவி : போங்க நான் காலேஜ் படிக்கும்போது சொன்னதுக்கே அடிச்சாங்க. இப்ப எப்படி சொல்றதாம்...!
கணவர் :

### க்ரிஷ்

என்ன தான் பெரிய வீரனாக இருந்தாலும்...
வெயில் அடிச்சா திருப்பி அடிக்க முடியாது.



### கிஷாந்

10 வருஷத்துக்கு முன்னாடி வரைக்கும் எல்லோர் வீட்டு TV மேலயும் இது மாதிரி ஒரு போட்டோ இருக்குமல்ல...



### வேதிஜா

அம்மா தானே அடிச்சாங்க...
இதுக்காக அழலாமா கண்ணா...



யோவ் உனக்கு அம்மாகிட்ட அடிவாங்கி பழகிப் போச்சு ஆனா எனக்கு வலிக்குதையா...

### பவி

தந்தை: எக்ஸாம் ஹோலில தூங்கிட்டு வாரேன்னு சொல்லுறியே வெட்கமா இல்லையா உனக்கு?




மகன்: நீங்க தானேப்பா கேள்விகளுக்கு விடை தெரியலைன்னு முழிச்சுட்டு இருக்காதேன்னு சொன்னீங்க...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணுக்காயில் குடிநீர் வசதியின்றி 147 குடும்பங்கள் பாதிப்பு

(கண்டாவளை)

**முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட ஆரோக்கியபுரம் மற்றும் அமைதிபுரம் ஆகிய கிராமங்களில் வாழும் சுமார் 147 வரையான குடும்பங்கள் சுத்தமான குடிநீர் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளன.**

தற்போது குறித்த பகுதியில் சுத்தமான குடிநீர் பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் மேற்படி கிராமத்தில் இரண்டு பொதுக் கிணறுகள் மாத்திரமே குடிநீர் பெறுவதற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இதில் ஒரு கிணறு தற்போதைய வரட்சி காரணமாக நீரின்றி போயுள்ளது மற்றைய கிணற்றிலிருந்து நாளாந்தம் குறிப்பிட்ட அளவு தண்ணீரை மட்டுமே பெறக்கூடியதாவே உள்ளது.


இதனால் குறித்த பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு காணப்படுகின்றது. சில வேளைகளில் குடிநீருக்காக நீண்ட தூரம் சென்று குடிநீர் பெற வேண்டியுள்ளதாகவும் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனை விட போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலை காணப்படுவதுடன் தமது கிராமத்தில் இருந்து சமுர்த்தி கொடுப்பனவோ மற்றும் பிரதேச செயலக தேவைகளுக்காக செல்வதாக இருந்தால் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கவேண்டிய நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தமது கிராமத்தில் குடிநீரின்மை, போக்குவரத்து வசதிகளின்மை, காட்டு யானைகளின் தொல்லை என பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வாழ்வதாக தெரிவித்துள்ளனர். (4-315)



நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவ 10 ஆம் திருவிழாவின் காலை உற்சவம் நேற்று மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. காலை 10.15 மணிக்கு இடம்பெற்ற வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து கஜாவல்லி, மஹாவல்லி சமேதரராக முத்துக்குமாரசுவாமி எழுந்தருளி அருள் பாலித்தார்.



முல்லைத்தீவு மாவட்ட செயலக "செய்தி மடல்" இலத்திரனியல் சஞ்சிகை நேற்று முன்தினம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

மாவட்ட செயலக பிரதம உள்ளகக்கணக்காய்வாளரும் உற்பத்தித்திறன் பிரிவின் பிரதம இணைப்பாளரும் சஞ்சிகை ஒருங்கிணைப்பாளருமான கே.லிங்கேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு குறித்த இதழை வெளியிட்டு வைத்தார். (படம்:கிருஷ்ணகுமார்)

# உறவுகளை தேடி அலைந்த 121 பேர் இதுவரை உயிரிழப்பு

(நெளுக்குளம்)

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி போராட்டம் மேற்கொண்டு வரும் அவர்களது உறவுகள் பல்வேறு போராட்டங்களை நீண்ட காலமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடியலைந்து பல துன்பங்களையும் துயரங்களையும் சுமந்து வயோதிப காலங்களில் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனைகளிலும் ஏனைய உறவுகளின் பாதுகாப்பிலும் இருந்து வருகின்றனர்.

இவ்வாறு தமது உறவுகளை தேடியலைந்து 121 உறவுகள் நோயினால் பீடிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். வவுனியா மாவட்டத்தில் 16 பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக உறவுகள் தெரிவித்துள்ளனர்.

வடகிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் வீதிகளிலிருந்து தமது போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

சர்வதேசத்தின் தலையீடுகளை கோரியும் ஐக்கிய நாடுகள் தமது விடயங்களில் தலையீடு செலுத்தி தீர்வுகளை பெற்றுத் தருமாறு கோரியும் உறவுகள் தமது போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இவர்கள் இன்றுடன் 2000 நாட்களை கடந்தும் போராடி வருவது குறிப்பிடத்தக்கது. (4-299)

# திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஐவர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட வட்டக்கச்சிப் பகுதியில் தருமபுர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து ஒரு திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் 4 பேரை கைது செய்துள்ளனர்.

அதில் வட்டக்கச்சி ஸ்ரீ ரங்க நாத பெருமாள் ஆலயத்தில் திருப்பணி அபிவிருத்தி வேலைக்காக வைக்கப் பட்டிருந்த இரும்பு கேடர் கள் ஐந்தை திருடிய குற்றச் சாட்டில் ஒருவரும் மற்றும் இராமநாதபுரம் பகுதியில் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பசு மாட்டினை திருடிய குற்றச் சாட்டில் ஒருவரும் அதே பகுதி யில் தண்ணீர் இறைக்கும் பம்பியை திருடிய குற்றச்சாட்டில் மற்றுமொரு சந்தேக நபரும் வட்டக்கச்சி கல்மடு பகுதியில் நான்கு துவிச்சக்கரவண்டிகளை திருடிய குற்றச்சாட்டில் மற்றுமொரு சந்தேகநபரும் இராம நாதபுரம் மாவடியம்மன் ஆலய திருப்பணி உண்டியலை திருடிய குற்றச் சாட்டில் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் குற்றத்தை ஒப்புக் கொண்ட தற்கிணங்க கிளிநொச்சி நீதி மன்றில் முற்படுத்தியபோது அவர்களை எதிர் வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தர விட்டார். (4-316)

# நல்லூர் முருகன் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தை முன் னிட்டு இலங்கை இளங்கலை ஞர் மன்றத்தினால் நடத்தப்படும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் 11 ஆம் திருவிழாவான இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.45 மணிக்கு வயலின் இசை இடம் பெறவுள்ளது.

இதன்போது வயலின் - வனஜா ஈஸ்வரசர்மா, மிருதங்கம்-ந.சதீஸ்குமார், கெஞ்சிரா ச.அரவிந்தா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து 7.15 மணிக்கு பண்ணிசையும் இன்னிசையும் நடைபெறவுள்ளது.

இதில் பாட்டு- என்.ஞானச் செல்வம், ஹார்மோனியம் என். செல்வச்சந்திரன், மிருதங்கம் க.சிவகுமார், கெஞ்சிரா க.இசை நிலவன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (4)

# நுணாவில் ஐ.ஓ.சி.யில் விவசாயிகளுக்கு இன்று டீசல்

(சாவகச்சேரி)

பெரும்போக நெற்பயிர்ச் செய்கையை முன்னிட்டு நிலத்தைப் பண்படுத்த உழவு இயந்திரங்களுக்கு தேவையான டீசல் நுணாவில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தால் இன்று வழங்கப்படவுள்ளது.

அதற்கு அமைய தென்மராட்சி பிரதேசத்திலுள்ள உழவு இயந்திரங்களுக்கு தேவையான டீசல் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் 4.00 மணி வரை வழங்கப்படவுள்ளது.

எனவே தென்மராட்சி பிரதேசத்திலுள்ள உழவு இயந்திரங்களை வைத்துள்ள விவசாயிகள் தத் தமது கமக்கார அமைப்புகள் ஊடாக விவரங்களை வழங்குமாறு நுணாவில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கியூ.ஆர் கோட் அடிப்படையிலேயே இந்த டீசல் விநியோகம் இடம்பெறும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4-30-104)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அமைச்சு அடுத்த வாரம் வடக்கு மாகாணத்திற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த தலைமையிலான உயர்மட்டக்குழு அடுத்த வாரம் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களுக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த, கல்வி அமைச்சின் செயலாளர் எம். என். ரணசிங்க மற்றும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க ஆகியோருடன் கல்வி அமைச்சின் அதிகாரிகள், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் உபதலைவர், உறுப்பினர்கள் அடங்கிய குழுவினரே எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சிக்கும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

18 ஆம் திகதி வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி, அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் அமைக்கப்பட்டுள்ள மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடத் தொகுதியின் வைபவ ரீதியான திறப்பு விழா இடம்பெறவுள்ளது.

அரசாங்கத்தின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் சுமார் 525 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத் தொகுதியைக் கல்வி அமைச்சர் கலாநிதி. சுசில் பிரேம் ஜெயந்த திறந்து வைக்கவுள்ளார்.

மறுநாள் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையத்திலும் கட்டடமொன்றைக் கல்வி அமைச்சர் திறந்து வைக்கவுள்ளார். (4-33)

## குளவிக் கொட்டுக்கு இலக்கான ஆறு பேர் மருத்துவமனையில்

(கரணவாய்)

குளவிக் கொட்டுக்கு இலக்கான ஆறு பேர் வரணி பிரதேச மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று முன்தினம் புதன் கிழமை வரணி மாசேரி பகுதியில் குளவிக்கூடு கலைந்ததில், குளவி கொட்டியதில் நாலு பேர் பாதிக்கப்பட்டு வரணி பிரதேச மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதே போன்று கடந்த திங்கட்கிழமையும் இருவர் குளவிக் கொட்டுக்கு உள்ளான நிலையில் சிகிச்சை பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அண்மைய நாட்களில் கடும் காற்று வீசி வருவதனால் குளவிகள் கலைவதும் ஒலைகள் விழுவதாலும் இக் குளவிக் கொட்டுகள் இடம் பெறுவதாக பிரதேசவாசிகள் தெரிவிக் கின்றனர். (4-60)



யாழ்.மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு நடத்தும் சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களுக்கான விற்பனை கண்காட்சி நிகழ்வானது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் யாழ்.சங்கிலியன் பூங்காவில் நடைபெற்றது.
(படம்-சிவசாந்தன், ரவிசாந்)

## கசிப்புடன் ஒருவர் கைது

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் - காட்டுப்புலம் பகுதியில் 5 லீற்றர் கசிப்புடன் 60 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இரவு நேர கடமையில் இருந்த பொலிஸாரால் இக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர் கசிப்பினை வீட்டில் மறைத்து வைத்திருந்த வேளையே அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்த சந்தேக நபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4- 104)

## உரும்பிராய் அன்னங்கை ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம்

(குப்பிழான்)

உரும்பிராய் மேற்கு அன்னங்கை ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த செவ்வாய்க் கிழமை மாலை 6.30 மணியளவில் அபிஷேகம், விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமானது.

தொடர்ந்தும் பத்துத் தினங்கள் இவ்வாலய அலங்கார உற்சவம் இடம் பெற உள்ளதுடன் எதிர்வரும் வியாழக்கிழமை 18.08.2022 காலை 9 மணிக்குத் தீர்த்த உற்சவமும் இடம்பெறும் எனமேற்படி ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (4-18)



அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று சிறப்பாக இடம் பெற்றது. (படம்-மகாலிங்கம்)

## வீதியை சேதப்படுத்தியவருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபைக்கு சொந்தமான வீதியை சேதப்படுத்தியவரிடமிருந்து, 3 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாவை மாநகர சபை அறவிட்டுள்ளது.

யாழ். நகர் மத்தியை அண்டிய பகுதியில் வசிக்கும் குடியிருப்பாளர் ஒருவர், இவ்வாறு வீதியைச் சேதப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அறிந்து விசாரணைகளை முன்னெடுத்த மாநகரசபை அதிகாரிகள் வீதியை சேதப்படுத்தியமைக்கான நஷ்ட ஈடு மற்றும் தண்டப்பணமாக 3 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாவை அறவிட்டுள்ளனர். (4-18-33)

## மூக்குக் கண்ணாடி வழங்கி வைப்பு

(சாவகச்சேரி)

லண்டனில் வசித்து வரும் ஆஷனா சூரிய குமார் தனது 17ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அண்மையில் சாவகச்சேரி தனங்கிளப்பு பகுதியில் உள்ள தேவைப்பாடுடைய 50 பேருக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடிகளை வழங்கி வைத்துள்ளார்.

சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் நிமலரோகனின் கோரிக்கைக்கு அமைவாக யாழ்ப்பாணம் தீபா கண்ணாடியகம் ஊடாக குறித்த உதவித் திட்டத்தை வழங்கி வைத்திருந்தார்.

இதன்போது கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு குறைபாடுடையவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-30)

## இளவாலையில் ஞாயிறன்று இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் அமரர். சிவராஜரட்ணம் மோகனின் நினைவாக அவர்களது குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்புடன் தொற்றா நோய்களை ஆரம்பத்தில் கண்டறியும் நோக்கிலான பரிசோதனைகளை கொண்ட இலவச மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த மருத்துவ முகாம் இளவாலை பிரதேச மருத்துவமனையில் நாளை மறுதினம் 14 ஆம் திகதி காலை 8.30 மணி முதல் 12 மணி வரை இடம் பெறவுள்ளது.

பொது மருத்துவ நிபுணர் த.பேரானந்தராஜாவுடன் யாழின் பிரபல மருத்துவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்

35 வயதுக்கு மேற்பட்ட கிளினிக் சிகிச்சைகளுக்கு செல்லாதவர்கள் இம் மருத்துவ முகாமில் கலந்துகொண்டு தங்களின் உடல் நலம் தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும்.

இம் மருத்துவ முகாமில் கலந்து கொள்ள 12 மணி நேரங்களுக்கு முன்னர் தொடக்கம் உணவு ஆகாரங்களை தவிர்த்து விட்டு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். (4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 300 | 300 | 400 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 350 | 500 |
| தக்காளி | 400 | 350 | 380 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 300 | 200 |
| கோவா | 350 | 350 | 350 | 400 |
| கரட் | 280 | 320 | 350 | 400 |
| பூசணி | 130 | 100 | 120 | 140 |
| புடோல் | 80 | 100 | 120 | 180 |
| வாழைக்காய் | 120 | 130 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 280 | 250 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 160 | 160 | 200 |
| பாகற்காய் | 300 | 500 | 450 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 160 | 240 |
| பயற்றங்காய் | 200 | 280 | 300 | 400 |
| லீக்ஸ் | 350 | 200 | 280 | 300 |
| பீற்றூட் | 120 | 180 | 140 | 180 |
| கறிமிளகாய் | 600 | 650 | 700 | 800 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 600 |
| போஞ்சி | 450 | -- | 650 | 700 |
| கத்தரிதம்புள்ள | 280 | 200 | 200 | 350 |
| கீரை - 1 பிடி | 150 | 70 | 100 | 120 |
| தேசிக்காய் | 300 | 250 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 65 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 300 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 300 | 400 |
| முள்ளங்கி | 120 | 80 | 120 | 200 |
| பொன்னாங்கண்ணி | 80 | 90 | 100 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 100 | 80 | 140 | 20 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு 45 ஆயிரம் டொலர்கள் நன்கொடை வழங்கிய அவுஸ்.கிரிக்கெட் அணி

(கொழும்பு)

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு நிவாரணமாக 45,000 டொலர்களை அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி நன்கொடையாக வழங்கியுள்ளது.

சிறுவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 'யுனிசெப்' ஊடாக இந்தப் பணம் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட அவுஸ்திரேலியா, இரண்டு டெஸ்ட் போட்டிகள், ஐந்து ஒரு நாள் போட்டிகள் மற்றும் மூன்று இருபது-20 போட்டிகளில் விளையாடியது.

இந்த போட்டிகளின்போது பெற்றுக்கொண்ட பரிசுத்தொகையினையே அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி வீரர்கள் நன்கொடையாக வழங்கியுள்ளனர். (நி)

# சர்வகட்சி புதிய அமைச்சரவை அடுத்த வாரம் நியமனம்?

(கொழும்பு)

சர்வகட்சி புதிய அமைச்சரவை அடுத்த வாரம் நியமிக்கப்படலாம் என அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வகட்சி ஆட்சி அமைப்பதற்கு அனைத்துக் கட்சிகளுடனும் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளின்படி, சர்வகட்சி ஆட்சி அமைக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

தற்போதுள்ள அமைச்சரவையில் ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகளை இணைத்து சர்வகட்சி அரசாங்க அமைச்சரவை நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி)

# நாளாந்த தொற்று 200 ஐ கடந்தது

(கொழும்பு)

நாட்டில் நேற்று முன்தினம் மேலும் 227 பேருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

அதன்படி, நாட்டில் கொவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 667,385 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# ஹோட்டல்கள், உணவகங்களில் மது விற்பனைக்கு அனுமதி

(கொழும்பு)

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களுக்கு மென் மதுபானங்களான வைன் மற்றும் பியர் ஆகியவற்றை விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்கில் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை தெரிவித்துள்ளது.

இதேவேளை மென் மதுபான விற்பனைக்கான வருடாந்த அனுமதிப்பத்திரம் 25 ஆயிரம் ரூபாவிற்கு வழங்கப்பட உள்ளது.

இதேவேளை நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக சுற்றுலாத் துறை பாரிய வீழ்ச்சியடைந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் படி மென் மதுபான விற்பனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சர்வகட்சி வேலைத்திட்டம் தொடர்பில் அநுரகுமாரவிற்கு ஜனாதிபதி கடிதம்



(கொழும்பு)

நாட்டுக்கான சர்வகட்சி வேலைத்திட்டத்திற்கு ஆதரவு வழங்கப்படும் என நம்புவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கடிதம் மூலம் அனுப்பி வைத்துள்ளார்.

சர்வகட்சி வேலைத்திட்டம் தொடர்பில் ஆலோசிக்க தாம் முன்வைத்த யோசனைக்கு தேசிய மக்கள் சக்தியின் பதில் கிடைத்துள்ளதாக ஜனாதிபதி தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார். (நி)


## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
### 134,துணைவி வீதி, வட்டாரம் –04

வலிகாமம் மேற்கு பிரதேசசபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 04, வல்லை வீதி 01 ம் ஒழுங்கையிலுள்ள இல : 134 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **கார்த்திகேசு சிதம்பரப்பிள்ளை** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய ஆதனத்தினை **கந்தசாமி சிதம்பரப்பிள்ளை** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ச.வை.சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 15665/ 07.02.1988 ம் இலக்க உறுதியால் **சிதம்பரப்பிள்ளை கைம்பெண் நாகம்மா** ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

குறித்த **கந்தசாமி சிதம்பரப்பிள்ளை** காலஞ்செல்ல குறித்த ஆதனம் அவரின் வாரிசான **சிதம்பரப்பிள்ளை சேந்தன்** ஆகியவருக்கு பிதாவழி முதுசமாக வந்தடைந்தது.

குறித்த ஆதனத்தினை **தயானந்தன் பெண் ரதீ** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 12173/12.02.2012ம் இலக்க உறுதியால் குறித்த **சிதம்பரப்பிள்ளை சேந்தன்** ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **தயானந்தன் பெண் ரதீ** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தரு மாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **தயானந்தன் பெண் ரதீ** ஆகியவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தவிசாளர்/ செயலாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை

(12412)



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1999 இந்து<br>நட்சத்திரம்:மகம் 2<br>கி.பா: 10 சூரி 5 செவ் 2 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L பிரதி கணக்காளர் (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/12860 | பிறப்பு:1997 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா:60 ½ சூரி 12 செவ் 1 இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: உயர்தரம் கணினி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/12886 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா: 64 சூரி 7செவ் 1 இல்<br>உயரம்: 180 cm<br>தகைமை/தொழில்:BSc Eng.<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12862 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>கி.பா: சூரி 7 செவ் 9 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA,பட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:அரச,தனியார் உத்தியோகம் உள்நாடு மட்டும்<br>தொ.இ: G/12887 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா:சூரி 1 செவ் 11 இல்<br>தகைமை/தொழில்:கனடா<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர் உள்நாடு விரும்பத்தக்கது<br>தொ.இ: B/12865 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 1<br>கி.பா:3 சூரி. செவ் 2 இல்<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: கல்வியற் கல்லூரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில் அல்லது வெளிநாடு<br>தொ.இ:G/12892 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம் : சித்திரை 2<br>கி.பா: சூரி .செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:A/L நகைக்கடை கணக்காளர் வியாபாரம்<br>எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/12868 | பிறப்பு:1994 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>கி.பா: சூரி 5செவ் 4 இல்<br>உயரம்:160 cm<br>தகைமை/தொழில்:A/L அழகுக்கலை<br>எதிர்பார்ப்பு:அரசதொழில் / நிரந்தர தொழில்<br>தொ.இ:G/12893 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

### அம்புலிமாமா

## சாம்பாரில் தங்கம்

(நேற்றையை தொடர்ச்சி)

அதை அண்டாவின் பின்னால் மறைந்திருந்த நஞ்சப்பன் கவனித்து விட்டான். அவள் ஏதோ அந்த வீட்டில் திருடி எடுத்து வந்து வைத்திருக்கிறாள் என்பது அவனுக்குத் தெரிந்து போயிற்று. முத்தம்மா அங்கிருந்து போனதும் இன்னொரு தின்பண்டத்தை எடுக்கப் போனான். அதை யாரோ பார்த்து விட்டான்.

அவன் உடனே திருடன் திருடன் என்று கத்தவே சிலர் ஓடி வந்து ஓட முயன்ற நஞ்சப்பனைப் பிடித்துக் கொண்டார்கள். அவர்கள் அவனை அந்த வீட்டு எஜயமானின் முன் நிறுத்தினார்கள் அவனிடம் அவர்கள் "இவன் திருட்டுத் தனமாகச் சமையற்கட்டில் புகுந்து விட்டான்.

இவன் இனிப்புத் தின் பண்டங்களைத் திருட முயன்ற போது இவனை நாங்கள் கையும் மெய்யுமாகப் பிடித்து விட்டோம்." என்றார்கள்.

எஜமானரும் "நீங்கள் அசகாய சூரர்கள் தான் யாரோ ஒருவர் ஒரு இனிப்புத் தின் பண்டத்தை எடுத்ததைப் பெரிய திருட்டு என்று கண்டுபிடித்து விட்டீர்களே" என்று கேலியாகக் கூறினார்.



அப்போது நஞ்சப்பன் "ஐயா! நான் திருடன் இல்லை. நான்கு குழந்தைகளுக்குத் தகப்பன். இன்று எனக்கு எந்த வேலையுமே கிடைக்கவில்லை. ப்சியால் துடிதுடிக்கும் ஏழை நான் உங்கள் சமையல் கட்டிலிருந்து வந்த வாசனை என்னை இங்கு வரை இழுத்து வந்து விட்டது" என்றான்.

வீட்டு எஜமானரும் அவனை ஏற இறங்கப் பார்த்து விட்டு "சமையல் வாசனை உன்னை இழுத்தாலும் யாருக்கும் தெரியாமல் நீ உள்ளே வந்தது தவறு தானே" என்று கூறி அவனைத் தன் அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஒரு தட்டில் தனக்கு உணவையும் மற்றொரு தட்டில் நஞ்சப்பனுக்கு உணவையும் கொண்டு வந்து வைக்கும்படித் தன் வேலையாளிடம் கூறினார். அவர் நஞ்சப்பனை சாப்பிடச் சொல்லி தானும் அவன் முன் உட்கார்ந்து சாப்பிட்டார்.

அவன் சாப்பிட்டு முடித்ததும் அவர் உனக்கு ஏன் சாப்பாடு போட்டேன் தெரியுமா? என்று கேட்டார். நஞ்சப்பன் கண்களில் நீர் கசியத் தனக்குத் தெரியாது என்று தலையை ஆட்டினான்.

எஜமானரும் சாதம் சுவாமிக்குச் சமம் அதைத் திருடிச் சாப்பிடும் நிலை எந்த மனிதனுக்கும் ஏற்பட்டு விடக்கூடாது.

(தொடரும்)

# சிலப்பதிகாரம்


## முடியாத ஊடல்

ஆமாம் பயிர்ப்பு நாலு குணங்க்ளில் ஒன்றுதானே? நாலு குணங்கள் பெண்களுக்குச் சொல்லப்பட்டவைதானே? இருக்கலாம். அதற்காக ஆண்கள்...

மாதவி இது நீதிமன்றம் இல்லை இங்கே நியாயங்கள் எடுபடாது காதல் உணர்வுகள் சம்பந்தப்பட்டது. எனக்கு காதல் இல்லையா?

இருப்பதால்தானே வருந்துகிறீர்கள்? நான் வருந்துவது உனக்குத் தெரிகிறது. இல்லையா?

எனக்குத் தெரிந்து என்ன பயன்?




வசந்தமாலை நீ என்ன சொல்கிறாய்?

நீங்கள் வருந்துவது தெரிய வேண்டியவருக்குத் தெரியவேண்டும் என்கிறேன். எப்படித் தெரிய வைப்பது?

தூது அனுப்பங்கள் காதலை உருவாக்க மட்டும் பயன்படுவது அல்ல தூது. உடைந்த காதலை ஒட்டவும் பயன்படுத்தலாம்.

நீ போய் அவரிடம் என் வருத்தத்தையும் தாபத்தையும் எடுத்துச் சொல்லி அழைத்து வருவாயா?

நான் போகிறேன் ஆனால் மனத்தில் இருப்பதை நீங்கள் தான் சொல்லவேண்டும் அதுதான் முறை.

அது எப்படி?

உங்கள் மனத்தில் இருப்பதை அப்படியே ஒரு கடிதமாக எழுதுங்கள் அதை நான் எடுத்துப் போய் அவரிடம் தருகிறேன்.

செய்வாயா? எனக்காக அதைச் செய்வாயா? மாதவியின் கண்கள் ஈரமாயின.

இதைக்கூடச் செய்யாமல் தோழி என்று நான் ஒருத்தி எதற்கு?

மாதவி தன் வருத்தத்தையும் தாபத்தையும் காதலையும் கொட்டி ஒரு கடிதம் எழுதினாள். அதை வசந்தமாலையிடம் ஒப்படைத்தாள்.

வசந்தமாலை இதை அவரிடம் கொடு. என் நிலைமையை எடுத்துச் சொல்லிக் கையோடு அவரை அழைத்து வா.

வசந்தமாலை புறப்பட்டாள் கோவலன் தங்கி இருக்கும் இடத்தின் விவரத்தை விசாரித்து அறிந்து

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச்சான்று நீதிபதியாயிருந்து தண்டனை தருமுன் நண்பனாயிருந்து எச்சரிக்கை செய்யும்.
*~ ஸ்டானிஸ்லாஸ்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# போர்க் கலங்கள் நிறுத்தப்படும் இடமாக...

இலங்கை அமைந்துள்ள கேந்திர ஸ்தானத்தைப் பார்க்கும்போது, அது சோதிட நிலையில் கலகஸ்பதியாக இருப்பதை அவதானிக்க முடியும்.

இலங்கை வேந்தன் இராவணன் மிகச் சிறந்த சிவபக்தன். சாமகானத்தை இசைத்து சிவப்பரம்பொருளை தன் வசமாக்கிய மகா கலைஞன்.

அறம் உணர்ந்த உத்தமன். தென்புலத்தார் கடன் செய்வதில் பின்னிற்காப் பெருந்தகையாளன்.

அப்பேற்பட்ட இலங்கை வேந்தன் சீதையைச் சிறைப்பிடித்ததால் இலங்காபுரி எரியுண்டது.

அவதாரபுருஷராகிய இராமபிரானின் சேனைகள் இலங்கை மண்ணை யுத்த களமாக்கின.

இதனால் இராவண குலம் அழிந்தது எனும்போது, இது ஏன்? எதற்கு? என்று வினவுகின்ற மனநிலை ஏற்படுகிறது.

உண்மை. ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது போர் தொடுப்பது அல்லது இன்னொரு நாட்டின் எல்லைகளைக் கபளீகரம் செய்வது என நாட்டுக்கு நாடு யுத்தம் செய்வது வரலாற்று உண்மை.

ஆனால் ஒரு பெண்ணைக் கடத்தி வந்ததனால் ஒரு நாடு எரியூட்டப்பட்டது. அந்த நாட்டின் வேந்தனும் அவன் பரிவாரங்களும் மாண்டன எனும்போது இதற்கு இலங்கையின் அமைவிட வாஸ்துவே காரணம் எனக் கருதுவதில் தவறில்லை.

இதுதவிர, பின்னாளிலும் இலங்கையை எப்போதும் கொதிநிலையில் வைத்திருக்கக் கூடிய மனநிலை கொண்ட ஆட்சியாளர்களும் இன, மத, மொழிப் பேதமை கொண்ட மக்களும் இருப்பதும் இந்த நாட்டின் விதிப் பிழை என்று கூறுவதைவிட, வேறு என்ன தான் இருக்கிறது.

1958இல், 1983இல் எனத் தொடங்கிய தமிழ் இன அழிப்பு 1983 இற்கு பின் தொடர்ச்சியாக நடந்து 2009இல் இலட்சக்கணக்கான மனித உயிர்களைக் கொன்று குவித்து கோரதாண்டவம் ஆடியது.

எங்களுக்கு உரிமை தாருங்கள் என்று கேட்ட ஓர் இனத்தை இவ்விதம் கொன்று குவித்த கொடுமை வேறு எங்குதான் நடந்திருக்கும்.

இந்த அடிப்படையோடு 2022இல் தென் பகுதியில் மந்திரி பிரதானிகளின் வீடுகள் எரியூட்டப்பட்டது வரையில், இலங்கையில் யுத்த பயங்களும் நீடித்துள்ளது.

இந்தநிலைமை இனி நிற்கும் என்றால், இல்லை இனித்தான் மிகப்பெரும் போர்க் களமாக இலங்கை மாறப் போகிறது என்று கூறுமளவுக்கு இலங்கையின் நிலைமை உள்ளது.

ஆம், சீனக் கப்பல். பாகிஸ்தானின் போர்க் கப்பல். இதற்கு மேலாக, இந்தியாவின் வேவு விமானம் என சர்வதேச யுத்தத்துக்கான போர்க் கலங்கள் நிறுத்தி வைக்கப்படுகின்ற இடமாக இலங்கை மாறுகிறது.

அதாவது எந்த நாட்டுடனும் போர் தொடுக்காமலே போர் விமானங்கள் குண்டுகள் போடக்கூடிய இடமாக இலங்கை வரப்போகிறது.

இங்குதான் இலங்கையின் அமைவிட வாஸ்து அபத்தம் என்று உணர வைக்கிறது.

# சுற்றுலா வாகனங்களுக்கு எரிபொருள் வழங்க விசேட ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கையில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட அனைத்து வாகனங்களுக்கும் எரிபொருள் வழங்கப்படும் என அதன் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் நாடு முழுவதும் பயணிப்பதில் எவ்வித அசௌகரியமும் ஏற்படக் கூடாது என்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளுக்காக விமான நிலையத்தில் விசேட எரிபொருள் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு அண்மையில் தீர்மானித்துள்ளது. (ம-7)

# மத்திய கலாசார நிதியத்தில் பாரிய நிதி நெருக்கடி
## ஊழியர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

மத்திய கலாசார நிதியம் பாரிய நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக நிதியத்தின் ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு நாட்டின் கலாசார தலங்களை காண்பிப்பதன் மூலம் கிடைக்கும் வருமானம் நாட்டின் முழு கலாசார பாரம்பரியத்தையும் பாதுகாப்பதற்கும் நிர்வகிப்பதற்கும் முறையாக பயன்படுத்தப்படுவதில்லை என மத்திய கலாசார நிதிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ம-7)

# நாட்டில் இன்றையதினம் 1 மணி நேரம் மின்வெட்டு

நாட்டில் இன்றையதினம் 1 மணிநேரம் மின்வெட்டு மேற்கொள்ளப்படும் என பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி, A,B,C,D,E,F,G,H,I,J,K,L,P,Q,R,S,T,U,V,W வலயங்களுக்கு மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை 1 மணி நேர மின்வெட்டு மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மின்வெட்டு அமுல்படுத்தப்படமாட்டாது. (ம-7)

# வவுனியாவில் பெற்றோல் விற்ற இளைஞன் கைது

வவுனியாவில் கறுப்புச் சந்தையில் பெற்றோலை விற்பனை செய்த நிலையில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, அண்ணாநகர் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் 21 லீற்றர் பெற்றோலினை பிறிதொரு நபருக்கு 1000 ரூபாய்ப்படி விற்பனை செய்த நிலையில் பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையில் குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 21 லீற்றர் பெற்றோலும் மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இளைஞரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7,250)

# காணாமல்போன சிறுமி கற்குகையிலிருந்து மீட்பு

(கொழும்பு)

லுணுகலை 27 ஆம் கட்டை பகுதியில் கடந்த 3 ஆம் திகதி முதல் காணாமல்போயிருந்த சிறுமி, கற்குகைக்குள் இருந்து நேற்று உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

லுணுகலையில் 14 வயது சிறுமியொருவர், கடந்த 3 ஆம் திகதி முதல் காணாமல்போனதாக அவரது பெற்றோரினால் லுணுகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து பொலிஸார் விசாரணை, தேடுதல் வேட்டையில் இறங்கினர்.

விசாரணைகளின் பிரகாரம் பல்லேகிருவ பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞர் ஒருவரும் 58 வயதுடைய லுணுகலைப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரும் அதே காலப் பகுதியில் தலைமறைவானமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து உடகிருவ கொட்டிகல்கே காட்டுப் பகுதியில் நேற்றுக் காலை முதல் தேடுதல் நடத்தினர்.

இதன்போது குறித்த சிறுமியும் சந்தேகநபர்கள் இருவரும் கற்குகையொன்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர். (ம-7)

## மே-9 அமைதியின்மை
# மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கைது

(கொழும்பு)

மே- 9 அமைதியின்மை சம்பவம் தொடர்பில் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் நிஹால் வேதாராச்சி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், மே- 9 அமைதியின்மை சம்பவத்தின்போது பொருட்களுக்கு சேதம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மே- 9 ஆம் திகதி அமைதியின்மையின் போது இரண்டு வீடுகளை சேதப்படுத்தியதாக அவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அவர் தங்காலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

# கொரோனா தொற்று மேலும் இருவர் மரணம்

(கொழும்பு)

கொரோனா தொற்றினால் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர்.

60 வயதிற்கு மேற்பட்ட இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நாட்டில் இதுவரை 16 ஆயிரத்து 605 கொரோனா தொற்றாளர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# போதை மாத்திரைகளுடன் ஓட்டமாவடியில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

போதை மாத்திரைகளுடன் 41 வயதுடைய சந்தேகநபரொருவர் ஓட்டமாவடி மாவடிச்சேனையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து சுமார் 1,100 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர் ஓட்டமாவடி பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய வாழைச்சேனைப் பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 49

கல்வி மற்றும் அறிவார்ந்த வாழ்க்கையில் முந்தைய தடைகள் நீக்கப்பட்டன. இதன் விளைவாக வளர்ந்து வரும் மற்றும் மாறுபட்ட வெளியீடுகள் உருவாகின. மேலும் தாராளவாத கலை மற்றும் வணிகப் பள்ளிகள் வெளிவரத் தொடங்கின. மத வாழ்க்கையில் கணிசமான வளர்ச்சி ஏற்பட்டது. கூடுதலாக ஒரு புதிய தலைமுறை இளைஞர்கள் சோவியத் சமூகத்தின் கருத்தியல் மற்றும் அறிவுசார் கட்டுப்பாடுகள் இல்லாமல் வளரத் தொடங்கினர். சுதந்திரத்திற்குப் பிந்தைய காலத்தில் சிறுபான்மை குழுக்களின் உறவுகள் பொதுவாக அமைதியாக இருந்தது.

உக்ரைனிய அரசாங்கம் வெளிப்படையாக யூத சமூகத்துடன் ஒரு நேர்மறையான உறவைப் பின்பற்றியது. மேற்கு உக்ரைனில் உள்ள ஹங்கேரியர்கள் மற்றும் ரோமானியர்களுக்கு தேசிய உரிமைகள் வழங்கப்பட்டன. மேலும் பல்லாயிரக்கணக்கான டாடர்களுக்கு (Tatars) உதவ அரசாங்கம் சில முயற்சிகளை மேற்கொண்டது. முன்னாள் அதிருப்தியாளர் முஸ்தபா ஜெமிலேவின் திறமையான தலைமையின் காரணமாக சுதந்திரத்திற்குப் பிந்தைய காலத்தில் டாடர்களிடையே அமைதியின்மை மட்டுப்படுத்தப்பட்டது.

உக்ரைனின் பெரிய ரஷ்ய சிறுபான்மையினர் சுதந்திரத்திற்குப் பிந்தைய் ஆண்டுகளில் தெளிவற்ற சூழ்நிலையில் காணப்பட்டனர். இருந்தாலும் சோவியத் ஒன்றியத்தில் ஆதிக்கம் செலுத்திய தேசியத்தின் ஒரு பகுதியாக, சோவியத் உக்ரைனில் "உளவியல் பெரும்பான்மை" என்று கருதிய ரஷ்ய சிறுபான்மையினர் அவ் விருப்பமான நிலையை தக்க வைத்துக் கொண்டனர். ஆனால் சுதந்திர உக்ரைனில் ரஷ்யர்களின் நிலை குறைவாகவே இருந்தது. உக்ரைனிய ரஷ்யர்களுக்கு குடியுரிமைக்கான முழு உரிமைகளையும் வழங்குவது ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை என்றாலும், ரஷ்ய மொழி நாட்டின் இரண்டாவது அதிகார பூர்வ மொழியாக அங்கீகரிக்கப்படாததால் அவர்களில் பலர் விரக்தியடைந்தனர்.

2012 இல், பிராந்திய அதிகாரிகள் சிறுபான்மை மொழிகளுக்கு அதிகார பூர்வ அந்தஸ்தை வழங்க அனுமதிக்கும் புதிய சட்டம் இயற்றப்பட்டபோது இந்த மிகவும் சர்ச்சைக்குரிய விடயம் ஓரளவுக்கு தீர்க்கப்பட்டது. மேலும், பள்ளி முறையின் படிப்படியான உக்ரைன்மயமாக்கல் பெரிய ரஷ்ய மக்கள்தொகை கொண்ட உக்ரைனின் மாநிலங்களில் (பகுதிகளில்) பிரபலமாகவில்லை. உக்ரைனை உள்ளடக்கிய "வெளிநாட்டிற்கு அருகில்" என்று அழைக்கப்படும் ரஷ்ய இனத்தவரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ரஷ்யாவின் சபதத்தால் இந்த விடயம் மேலும் சிக்கலாக்கப்பட்டது.

சுதந்திரத்திற்குப் பிந்தைய உக்ரைன் பல சமூக அவலங்களின் வளர்ச்சியைக் கண்டது. தெருக் குற்றம் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் இரண்டும் அதிகரித்தன. மேலும் உக்ரைன் சர்வதேச சட்டவிரோத போதைப்பொருள் வர்த்தகத்திற்கான ஒரு வழியாக மாறியது. போதைக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு, எச்.ஐ.வி நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் கவலைக்குரிய வளர்ச்சியுடன் சேர்ந்துள்ளது.

### குச்மாவின் இரண்டாவது பதவிக் காலம்

குச்மாவின் இரண்டாவது பதவிக் காலத்தில், வலது மற்றும் இடதுசாரி சக்திகளுக்கு இடையிலான மோதல்கள் சில சமயங்களில் அரசியல் ஸ்திரத்தன்மையை அச்சுறுத்தின. ஆயினும் கூட, புதிதாக நியமிக்கப்பட்ட பிரதம மந்திரி விக்டர் யுஷ்செங்கோ சட்டமன்றத்தின் மூலம் பொருளாதார சீர்திருத்தங்களை உருவாக்கினார். 21 ஆம் நூற்றாண்டின் முதல் ஆண்டுகளில் பொருளாதாரம் சீராக வளர்ந்தது. ஆனால் உக்ரைனில் அரசியல் சூழ்நிலை பதற்றமாக இருந்தது. ஏனெனில் அது நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் (EU) உறுப்பினராக இருக்க முயன்றது. அதேநேரத்தில் ரஷ்யாவுடன் நெருக்கமான உறவுகளை தொடர்ந்தது. இது ஒரு நுட்பமான சமநிலை நடவடிக்கையாகப் பார்க்கப்பட்டது.

2003 இல் உக்ரைன், ரஷ்யா, பெலாரஸ் மற்றும் கஜகஸ்தான் ஆகிய மூன்று நாடுகளுடனும் "கூட்டுப் பொருளாதார இடத்தை" நிறுவுவதற்கான ஒரு திட்டத்தை கொள்கையளவில் ஏற்றுக் கொண்டது. இருப்பினும், உக்ரைனில் ரஷ்ய சிறுபான்மையினருக்கான நிலைமைகள் மோசமடைந்து வருவதாக ரஷ்யாவின் குற்றச்சாட்டுகளால் உக்ரைனிய-ரஷ்ய உறவுகள் சீர் குலைந்தன. மேலும் கிரிமியாவில் ரஷ்ய விரிவாக்க வடிவமைப்புகளால் உக்ரைன் கவலைப்பட்டது.

யுஷ்செங்கோ 2001 இல் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவராக ஆனார். அடுத்த ஆண்டு, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தீர்மானத்தை மீறி ஈராக்கிற்கு ரேடார் அமைப்பை விற்பதற்கு குச்மா ஒப்புதல் அளித்ததை ஆடியோ டேப்கள் வெளிப்படுத்தியதாகவும், 2000 ஆம் ஆண்டு ஒரு அதிருப்தி பத்திரிகையாளரின் படுகொலையில் அவரை சிக்கவைத்ததாகவும் கூறப்படுகிறது.

தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுத்த குச்மாவை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.

### உக்ரைனிய பாராளுமன்றத் தேர்தல் -2002

இந்த தேர்தலில் கலப்பு வாக்கு முறைமை பயன்படுத்தப்பட்டது. வெர்கோவ்னா ராடாவின் (உக்ரைனின் பாராளுமன்றம்) பிரதிநிதிகளில் பாதி பேர் விகிதாசார அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (தொடரும்)

# யுத்தம் மற்றும் பொருளாதாரத் தடைகளால் ரஷ்யாவை நசுக்குவதே அமெரிக்காவின் இலக்கு

## சீனா குற்றச்சாட்டு

(பீஜிங்)

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போருக்கு முக்கிய தூண்டுதலாக அமெரிக்காவே இருந்ததாக சீனா குற்றஞ்சாட்டியுள்ளது.

நேட்டோ இராணுவக் கூட்டணியின் தொடர்ச்சியான விரிவாக்கங்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் உக்ரைனை இணைக்கும் முயற்சிகளின் பின்னணியில் அமெரிக்கா இருந்ததாக ரஷ்ய அரச செய்தி நிறுவனமான 'டாஸ்' இற்கு அளித்த பேட்டியில் ரஷ்யாவுக்கான சீனத் தூதர் ஜாங் ஹன் ஹுய் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் நெருக்கடியை உருவாக்கிய அமெரிக்கா ரஷ்யா மீது முன்னோடியில்லாத விரிவான பொருளாதாரத் தடைகளை விதிக்கும் அதேவேளையில், உக்ரைனுக்கு ஆயுதங்கள் மற்றும் இராணுவ உபகரணங்களை தொடர்ந்து வழங்கி வருகிறது.

அமெரிக்காவின் இலக்கு நீடித்த யுத்தம் மற்றும் பொருளாதாரத் தடைகள் மூலம் ரஷ்யாவை நசுக்குவதே எனவும் அவர் குறிப்பிட்டார். (நி)

# இராசிபலன்

12.08.2022
ஆடி 27, வெள்ளிக்கிழமை
பூரணை முற்பகல் 8.05 மணிவரை

பிரதமை பின்னிரவு 6.00 மணிவரை
அவிட்டம் -பின்னிரவு 4.18 மணிவரை
சுப நேரம் -6.04-7.34 மணிவரை

இராகு காலம் -10.34-12.04 மணிவரை
சந்திராஷ்டமம்-புனர்பூசம்

வளவன்



புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வருமானம் வரும் வழியைக்கண்டு கொள்வீர்கள், பயணங்கள் கைகூடும்.



மற்றவர்களை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, முயற்சிகளில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.



புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும் நாள்.



கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், நன்மைகள் நாடி வரும் நாள், மறைமுகப் போட்டிகள் மாறும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.



தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.



அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பயணங்கள் கைகூடும்.



இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், விருந்தினர் வருகையுண்டு, போசன சுகமுண்டு.



குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.



தொழில் நலன் கருதி பெரிய மனிதர்களைச் சந்திப்பீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.



குடும்ப பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.



ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, செல்வாக்கு மேலோங்கும் நாள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

நமக்கு வேண்டிய அனைத்தையும் கடவுள் கொடுத்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதியின்...

வெளியிட்ட இரு பெண்களை கொழும்பு மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மொரட்டுவ பிரதேசத்தில் வசிக்கும் இரண்டு பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் பாணந்துறை பிரதேசத்தில் இரண்டு வர்த்தக நிலையங்களை நடத்தி வருவதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-7)

## பெற்றோல்...

வங்கியின் பங்களிப்புடன் பெற்றோலுக்கான கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (ம-7)

## தாய்லாந்தில்...

மாத காலம் வரை தங்கியிருந்த அவர் நேற்று மாலை சிங்கப்பூரில் இருந்து புறப்பட்டு தாய்லாந்து நேரப்படி நேற்று மாலை எட்டு மணியளவில் அவர் அங்கு சென்றடைந்துள்ளதாக தெரியவந்துள் ளது.

தாய்லாந்தின் பாங்கொக் நகரில் அவர் தங்கியிருப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், ராஜதந்திர கடவுச்சீட்டு அடிப்படையில் 90 நாட்கள் அந்நாட்டில் தங்கியிருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

## அரசின் தவறான...

சுதந்திரக் கட்சியின் ஊடக மத்திய நிலையத்தை நேற்று திறந்து வைத்து பேசும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கையின் அனுமதியுடன் சீனாவில் இருந்து அம்பாந்தோட்டை துறைமுகம் வரை வரவிருந்த யுவான் வாங் - 5 கப்பல் சம்பந்தமாக ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைமையை அரசாங்கம் நாட்டுக்கு பாதிப்பை ஏற்படாத வகையிலும் நஷ்டம் ஏற்படாத வகையிலும் தீர்த்துக்கொள்ளும் என நம்புகிறேன்.

ஆட்சி வந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக ஜப்பான் இலங்கையிடம் இருந்து விலகிச் சென்றது. இது நாட்டின் வெளிவிவகார கொள்கையில் இருக்கும் தவறு. இலங்கைக்கு உலகில் உள்ள அனைத்து நாடுகளும் முக்கியம்.

தற்போதைய புதிய தொழில்நுட்பத்துடன் ஊடகங்கள் மிகவும் பலமிக்கவையாக மாறியுள்ளன.

அரசாங்கம் எந்தளவுக்கு சிறப்பாக இருந்தாலும் அரசாங்கத்தை மோசமான அரசாங்கமாக சித்தரித்து காட்டவும் மோசமான அரசாங்கமாக இருந்தாலும் சிறந்த அரசாங்கமாக காட்டவும் ஊடகங்களுக்கு முடியும் எனவும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (ம-7)

## 188 பேருக்கு...

தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 667,573 ஆக அதிகரித்துள்ளது. (ம-7)

## அனுமதியின்றி...

முகத்துக்குள் எந்தக் கப்பலும் பிரவேசிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சீனாவின் போலிஸ்டிக் ஏவுகணை மற்றும் செய்கைக்கோள் கண்காணிப்பு கப்பலான யுவான் வாங் - 5 வருவதை ஒத்திவைக்குமாறு இலங்கை வெளியுறவு அமைச்சகம் ஏற்கெனவே சீனாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

எவ்வாறாயினும், சீனாவிடம் இருந்து எந்தப் பதிலும் இது தொடர்பில் வெளியாகவில்லை. யுவான் வாங் - 5 ஜூலை 14ஆம் திகதி அதன் சீனத் துறைமுகத்தை விட்டு அம்பாந்தோட்டையை நோக்கி புறப்பட்டது.

இதன்படி இந்தக் கப்பல் சுமார் 28 நாட்கள் பயணிக்கிறது. இந்திய அதிகாரிகள், யுவான் வாங் 5 வருகைக்கு எதிராக தங்கள் எதிர்ப்பை தெரிவித்ததாக இந்திய ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இருப்பினும் இந்த விடயம் தொடர்பில் இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை. நேற்று முன்தினம் புதன்கிழமையன்று, யுவான் வாங் 5 கப்பல், அதன் போக்கிலிருந்து இலங்கைக்கு நகர்வதாகக் காட்டியது.

நேற்று மாலை நிலவரப்படி, இலங்கைக் கடலில் அம்பாந்தோட்டை தெற்கு துறைமுகத்தில் இருந்து சுமார் 600 கடல் மைல் தொலைவில் கப்பல் தரித்துள்ளது.

இந்தக் கப்பல் தற்போது இலங்கையின் கிழக்கே வங்காள விரிகுடாவை நோக்கி உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்த

கப்பல் ஓகஸ்ட் 15ஆம் திகதியன்று அம்பாந்தோட்டை துறைமுகத்துக்குள் அனுமதிக்கப்படுமென்று இலங்கை வாய்மொழி மூலம் சீன தூதரகத்துக்கு தெரிவித்துள்ளதாக பாராளுமன்றில் தெரிவித்தார். (ம-7)

## மஞ்சத்தில்...

சமேதராய் முத்துக்குமார சுவாமி மாலை 5 மணியளவில் மஞ்சத்தில் ஆரோகணித்தார்.

வழமைபோன்று கற்பூர பந்தங்கள் அலங்கரிக்க ஆயிரக்கணக்கான அடியவர்கள் சூழ முத்துக்குமார சுவாமி மஞ்சத்தில் வீதி உலா வந்தார். (ம-7,33,104)

## அடாத்தாக...

கப்பலின் பயணம் நிறுத்தப்படவில்லை.

சீனக் கப்பலின் இலங்கைப் பயணம் குறித்து இந்தியா மிகவும் கவலையடைந்துள்ளது. இது சீனாவின் உளவுக் கப்பல் என்று இந்தியா தெரிவித்துள்ளது.

இதனால், இந்தியாவின் தென்பிராந்தியத்திலுள்ள கேந்திர நிலையங்கள் வேவு பார்க்கப்படும் என தெரிவித்துள்ளது. சீனக் கப்பலின் வருகையை தடுத்து நிறுத்துமாறு இந்தியத் தரப்பினால், ஜனாதிபதி ரணிலுக்கு நேரடியாகத் தெரி விக்கப்பட்டது.

இந்தியாவின் ஆட்சேபனை காரணமாக, இந்தக் கப்பலின் பயணத்தை ஒத்திவைக்க இலங்கை அரசு கோரிக்கை விடுத்தது.

இந்தக் கப்பல் இந்தோனேசியக் கடலில் மணிக்கு 26 கிலோமீற்றர் வேகத்தில் பயணித்துக்கொண்டிருப்பதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. (ம-7)

## மனித...

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள் ஜனாதிபதி ரணிலை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போதே குறித்த விடயங்கள் வலியுறுத் தப்பட்டன.

மூன்று முக்கிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

ஜி.எஸ்.பி பிளஸ்வரிச்சலுகை சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக மனித உரிமைகள் தொடர்

பான விடயங்கள் அவற்றில் உள்ளதாக ஐரோப்பிய ஒன்றிய பிரதி நிதிகள் தெரிவித்தனர்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தி நிலையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது என கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய அலுவலகம் வெளியிட்டுள்ள டுவிட் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கருத்துப்படி, சிவில் மற்றும் மனித உரிமைகளின் பாதுகாப்பு, பேச்சுச் சுதந்திரம் மற்றும் எதிர்ப்பை வெளிப்படுத்துவது என்பவை தொடர்பிலும் பிரதிநிதிகள் மேலும் வலியுறுத்தியுள்ளனர். (ம-7)

## தயார் நிலையில்...

விளக்கத்தில் அமைந்துள்ள ரேடரை சரி செய்யும் பணியில் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சீனாவின் "யுவான் வாங் 5" என்ற உளவுக் கப்பலை இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் 4 நாட்கள் நிறுத்த சீனா திட்டமிட்டது. இந்த கப்பல் மூலமாக தமிழகம், கேரளா, கர்நாடகா, ஆந்திரா, புதுவை, தெலுங்கானா உள்ளிட்ட தென்மாநிலங்களின் இராணுவக் கட்டமைப்புகளை உளவு பார்க்க சீனா திட்டமிட்டுள்ளதாக சீனாவின் உளவுக் கப்பல் மூலம் 750 கி.மீ. தூரம் உள்ள பகுதிகளை கண்காணிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)


தன நிதானய
திகதி - 2022.08.11
சீட்டிழுப்பு இலக்கம் - 874
R 29 39 61 75
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD

மஹஜன சம்பத
திகதி 2022/08/11
சீட்டிழுப்பு இலக்கம் 4844
O 9 8 7 5 2 8
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.08.11
சீட்டிழுப்பு இலக்கம் 153
மீனம் 02 04 10 56 மீனம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 11/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1192
T 20 04 16 53 76

கொவிசெத
திகதி 2022.08.11
சீட்டிழுப்பு இலக்கம் 3086
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
D 05 21 56 59
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1819 நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2022.08.11 தினம் வியாழக்கிழமை
Q 39 47 55 61
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,366,720/-

சனிதா Shanida
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.08.11
சீட்டிழுப்பு இல : 3980
வர்ணம் : சிவப்பு
ரூ. 2,516,900/-
வெற்றி இலக்கங்கள் 57 69 72 73 N

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,280,628.60
திகதி 2022-08-11
வெற்றி வாரம் 3531
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 03 24 50 51 சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,246,420/-

லக்ன வாசனா 25
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 10 02 03 31 45
சீட்டிழுப்பு வாரம் 995
செம்மஞ்சள்
2022.08.11 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 252,951,475/-
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

சவர்தன வாசனா
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 517 திகதி 2022-08-11 வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து Y வெற்றி இலக்கங்கள் 20 68 69 விதி எண் 05
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,760,140/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1645
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.08.11
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,080,740/-
வெற்றி இலக்கங்கள் 15 45 70 74 J


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு ஆளுநருடைய செயற்பாடு பாரதூரமாகக் காணப்படுகின்றது

## சிறீதரன் எம்.பி குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

**வடமாகாண ஆளுநருடைய செயற்பாடு மிகவும் பாரதூரமாகக் காணப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குற்றம் சுமத்தியுள்ளார்.**

சமகால அரசியல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஏனைய கட்சிகள் குறிப்பாக விக்னேஸ்வரன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களை வடக்கு கிழக்கில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்களின் தலைவர்களாக நியமனம் செய்ய முடிவெடுக்கப்பட்டமை தொடர்பான செய்திகள் வெளிவந்திருக்கின்றன அது தொடர்பிலே பல்வேறுப்பட்ட கருத்துக்கள் நியாயங்கள் எங்களிடம் கேட்கப்படுகின்றது.

குறிப்பாக தமிழ் மக்கள் தங்களுடைய அன்றாடப் பிரச்சினைகளாக பல விடயங்களை சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள் அது தொடர்பில் நாங்கள் டலஸ் அழகப்பெரும அவர்களுக்கு எழுதிக் கொடுத்த விடயங்களையே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியை சந்தித்தபோதும் இந்த விடயங்களை அவருக்கு கூறி இருக்கின்றோம்.

தமிழ் மக்கள் அன்றாடம் சந்தித்து வருகிற முக்கியமான பிரச்சினைகளான அரசியல் கைதிகளுடைய விடுதலை முதற்கட்டமாக ஒரு சிறு தொகையினரை யாவது விடுதலை செய்ய வேண்டும் அத்தோடு காணி விடயங்களில் அதிக அக்கறை இந்த அரசாங்கம் செலுத்த வேண்டும் மக்களுடைய அன்றாட பிரச்சினைகளில் அதிக கவனம் செலுத்தப்படுமாக இருந்தால் நாங்கள் அபிவிருத்தி குழு தலைவர் பதவியை ஏற்பது தொடர்பில் பரிசீலிக்கலாம்.

கடந்த ஆட்சியின் போது அபிவிருத்திக் குழு இணைத் தலைவர்களாக பலரை இணைத்து அதில் ஒரு முடிவெடுக்கக்கூடிய நிலை இருக்கவில்லை.

இன்று வடக்கு ஆளுநருடைய செயற்பாடு மிகவும் பாரதூரமாகக் காணப்படுகின்றது ஒரு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவில் எடுத்த தீர்மானத்தை நிராகரித்து வடக்கு ஆளுநர் அலுவலகத்தினால் கடிதம் அனுப்பும் அளவுக்கு நிலைமை காணப்படுகின்றது.

மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் அதிகாரம் என்ன ஏன் இந்த மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கள் இருக்க வேண்டும் இது ஒரு கண் துடைப்புக்கு மக்களை ஏமாற்றுவதற்காக வேண்டி அரசாங்கத்தினால் கொடுக்கப்படுகின்ற பதவிகளாகும்.


இலங்கையினுடைய பொருளாதாரம் என்பது அதல பாதாளத்துக்கு சென்றுள்ளது. பொருளாதாரத்தை மீட்பது அல்லது பொருளாதார நடவடிக்கைகளை கட்டி அமைப்பதிலே எங்களுடைய பங்கு இருக்கும். பொருளாதார பிரச்சினை என்பது வடக்கு கிழக்கு மலையகத்தில் வாழ்கின்ற மக்களை மிகவும் பாதித்திருக்கின்றது. எனவே பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பினை வழங்குவோம்.

ஆனால் அபிவிருத்திக் குழு தலைவர் பதவிகளை நாங்கள் ஏற்பதை தவிர்த்துக்கொள்ள விரும்புகின்றோம்இந்த விடயங்கள் தொடர்பில் விரைவில் அனைவருடனும் பேசி ஒரு தீர்வினை எடுப்போம்." என தெரிவித்தார். (ம-7)

### கூட்டமைப்பை விரும்பாதவர்கள்

# தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து பயணிக்கலாம்

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகி இருக்கும் கட்சியின் ஆரம்ப கால உறுப்பினர்கள் விரும்பினால் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து பயணிக்கலாம் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களிடமிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செல்வாக்கு குறைந்து கொண்டே செல்கின்றது.

இதனை நான் கூறவில்லை அண்மைக் காலங்களில் இடம்பெற்ற தேர்தல் முடிவுகள் இதனை நன்கு உணர்த்துகின்றன.

தமிழ் மக்களுக்காக உண்மையை உரத்துக் கூறி பணபெட்டிகளுக்கு விலை போகாத தந்தை செல்வாவினால் வழிநடத்தப்பட்ட பழம்பெரும் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி என்பதை யாரும் மறக்க முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் தாமே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற தீர்வு விடயங்களை தாமே நிறைவேற்றப்போகிறோம் எனக் கூறிவரும் தலைவர் சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பினர் இதுவரை தமிழ் மக்களுக்காக எதனையும் பெற்றுக் கொடுக்கவில்லை.

இறுதி யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மூன்று இலட்சம் பேர் வன்னி யுத்த பூமியில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என இலங்கை அரசுக்கு எடுத்துக்கூறியவன் நானே.

இறுதியுத்தத்தில் உயிர் சேதங்கள் ஏற்படப் போகின்றது என தெரிந்தும் மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு வார்த்தைக்கு வருமாறு சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழைத்தபோது எவரும் முன்வரவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பசில் ராஜபக்சவை சந்திக்க சென்ற போது ஆனந்தசங்கரி சொல்லித்தான் எமக்கு மூன்று இலட்சம் பேர் அங்கு அகப்பட்டிருக்கிறார்கள் என தெரிய வந்ததாக கூறினார்.

பணத்துக்காக பதவிக்காக தமிழ் மக்களை என்றும் நான் விற்றதில்லை. அவ்வாறு ஆசை இருந்தவனாக இருந்திருந்தால் இரண்டு தடவைகள் தேசியப் பட்டியல் மூலம் மாவை. சேனாதிராஜாவை பாராளுமன்றத்திற்கு அனுப்பி இருக்க மாட்டேன் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

**VISA விண்ணப்பங்கள்**
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
(C-4729)


Srilankan Visa Extension
இலங்கை விசா நீடித்து தரப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777

பயிற்சியுடன் உடனடி **வேலை வாய்ப்பு**
A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை (C-4729)
விசா சேவைகள் V2 TRAVELS
எமது கிளைகள்
● பயிற்சிக்கால ஊக்கத்தொகை -30,000/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
● வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-
49A,சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

**காணி விற்பனைக்கு**
யாழ். நாவற்குழி சந்தியில் 42 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
❖ A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
❖ நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில். ❖ மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
❖ A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/-) மட்டும்.
❖ இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
❖ யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம்.
(12378)
பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் [illegible]
076 490 5403, 076 491 2493, 076 490 6029

**விற்பனையாளர் தேவை**
யாழ். நகரில் இயங்கும் புடைவை நிறுவனத்துக்கு வியாபார அனுபவம் உள்ள ஆண்/ பெண் உதவியாளர் தேவை. வியாபாரம் பழக ஆர்வம் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளவும்.
[illegible]னை சில்க்
[illegible]ரியகடை, யாழ்ப்பாணம்.
(12415)

**மணமகள் தேவை**
யாழ். இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த 31 வயதான மணமகனுக்கு தொழில்புரியாத மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை.
தொடர்பு (12413)
077 117 6264

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.